| நம்மையும் நாட்டு மக்களையும் காப்போம் | தொற்றிலிருந்து தமிழகத்தை மீட்போம் |
|---|---|

செ.வெ.எண்: 34 நாள்:26.06.2021

**_கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியம், ஜெகதேவி ஊராட்சி, மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பிராணவாயு உற்பத்தி கருவியை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்._**

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியம், ஜெகதேவி ஊராட்சி, மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இன்று (26.6.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள், கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.அ.செல்லக்குமார் மற்றும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.மதியழகன் ஆகியோர் முன்னிலையில், கிருஷ்ணகிரி ரோட்டரி கிளப் மற்றும் கோயம்பத்தூர் கிழக்கு ரோட்டரி கிளப் இணைந்து மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பிராணவாயு உற்பத்தி கருவி (OXYGEN GENERATION PLANT) மற்றும் 62.5 கிலோவாட் மின்சார உற்பத்தி செய்யும் ஜெனரேட்டர் செயல்பாடுகளை துவக்கி வைத்தார்.

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
**டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கொரோனா நோய்த்தொற்றை தடுப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், தற்பொழுது கொரோனா நோய்த்தொற்று குறைந்து வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, கொரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்ட நபர்களின் நலன் கருதி, அவர்களுக்கு உதவிடும் வகையில் பல்வேறு தனியார் நிறுவனங்கள், சமுதாய அமைப்புகள், தனி நபர்கள் என அவர்களால் இயன்ற நிதியுதவி மற்றும் மருத்துவ உபகரணங்களை வழங்கி வருகின்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பொதுமக்களின் நலன் கருதி கொரோனா நோய்த்தொற்று பாதித்த நபர்களுக்கு சிறப்பான முறையில் சிகிச்சை அளிக்க கிருஷ்ணகிரி அரசு தலைமை மருத்துவமனையில் 24 மணிநேரமும் தங்குதடையின்றி நேரடியாக பிராணவாயு (Oxygen) செலுத்தும் வகையில் சுமார் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் 13 ஆயிரம் கிலோ லிட்டர் கொள்ளளவு கொண்ட LIQUID OXYGEN TANK மற்றும் AIR VAPORIZING COLUMN ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது, கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியம், ஜெகதேவி ஊராட்சி, மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு நிமிடத்திற்கு 100 லிட்டர் பிராணவாயு உற்பத்தி செய்யும் கருவி (OXYGEN GENERATION PLANT) மற்றும் 62.5 கிலோவாட் மின்சார உற்பத்தி ஜெனரேட்டர் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பிராணவாயு உற்பத்தி கருவி மூலம் 50 படுக்கைகளுக்கு பிராணவாயு வழங்கும் உற்பத்தித்திறன் கொண்டது. தற்பொழுது 20 படுக்கைகளுக்கு பிராணவாயு பைப்லைன் மூலம் சென்றடைய வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், கூடுதலாக 5 லிட்டர் கொள்ளளவு கொண்ட 10 பிராணவாயு செறிவூட்டிகள் (OXYGEN CONCENTRATORS) என மொத்தம் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கொரோனா நோய்த்தொற்று குறைந்து வரும் சூழ்நிலையில் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு ஊரடங்கு பல்வேறு தளர்வுகளுடன் தளர்த்தப்பட்டு வருகிறது. இருந்தபோதிலும் பொதுமக்கள் சுய பாதுகாப்பு மற்றும் சுய கட்டுப்பாட்டுடன் தேவையான காரணத்திற்காக மட்டும் வெளியே செல்ல வேண்டும். அவ்வாறு வெளியே செல்லும்போது கண்டிப்பாக முககவசம் அணிந்து, சமூக இடைவெளியை கடைபிடித்து, கைகளை அடிக்கடி சோப்பு/கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்து தங்களையும், தங்களது சுற்றத்தாரையும் கொரோனா நோய்த்தொற்றிலிருந்து பாதுகாக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.வி.கோவிந்தன், வட்டார மருத்துவ அலுவலர் மரு.சிவகுமார், ரோட்டரி கிளப் நிர்வாகிகள் திரு.கே.எஸ்.வெங்கடேசன், திரு.மிர் உசைன் தோஸ்த், திரு.ஜோ அன்னாஜி, திரு.பிபி.மகேஷ் கே, திரு.எ.பன்னீர்செல்வம், திரு.ஜே.சன்ஜீவ்குமார் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**

| | |
|---|---|
| **முககவசம் அணிவீர்** | **தனிமனித இடைவெளி கடைப்பிடிப்போம்** |